

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவை யொட்டி ஆலந்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் என். சந்திரன் தலைமையில் நங்கநல்லூரில் நடைபெற்ற கலைஞரின் புகழ்பாடும் மாபெரும் இன்னிசை அரங்கம் மற்றும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்றக் குழு தலைவருமான டி.ஆர்.பாலு கலந்து கொண்டு உரையாற்றினார். அருகில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் தா.மோ.அன்பரசன், பகுதி செயலாளர் பி.குணாளன், த. ஜெயகுமார், வட்டச் செயலாளர் நடராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள், நேற்று (16.06.2023) கல்லணையிலிருந்து டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மா.பிரதீப் குமார், (திருச்சிராப்பள்ளி), தீபக் ஜேக்கப், (தஞ்சாவூர்), திருமதி. தி.சாருஸ்ரீ, (திருவாரூர்), ஜானி டாம் வர்கீஸ், (நாகப்பட்டிணம்), திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, (புதுக்கோட்டை), ஏ.பி.மகாபாரதி, (மயிலாடுதுறை), நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், செ.ராமலிங்கம், மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன் (திருவையாறு), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), மாநகராட்சி மேயர்கள் மு.அன்பழகன் (திருச்சிராப்பள்ளி), சண் ராமநாதன் (தஞ்சாவூர்) தலைமை பொறியாளர் (நீ.வ.து) பொறி.இராமமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாய பெருங்குடிமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### செந்தில்பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராகத் தொடர்வார்!

# நிதியமைச்சர் தங்கம் தென்னரசுக்கு மின்துறை மற்றும் வீட்டுவசதித்துறை! அமைச்சர் முத்துசாமிக்கு மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை!

## கூடுதலாக ஒதுக்கி அரசாணை வெளியீடு!

சென்னை, ஜூன்.17-

நிதி அமைச்சர் தங்கம் தென்னரசுக்கு மின்துறையை கூடுதலாகவும், வீட்டு வசதித் துறை அமைச்சர் ச.முத்துசாமிக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையை கூடுதலாக ஒதுக்கியும், செந்தில்பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராகத் தொடர்வார் எனவும் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

இது குறித்து அரசின் ஆணை வருமாறு:

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்கள் பொறுப்பில் இருந்த மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகியவை அவரது உடல் நிலையின் காரணமாக, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கு மின்சாரத் துறையும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் ச.முத்துசாமி அவர்களுக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையையும் பிரித்து வழங்கி இன்று தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

வி.செந்தில் பாலாஜி அவர்கள் இலாகா இல்லாத (Minister without portfolio) அமைச்சராகத் தொடரவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

### சென்னை கிழக்கு மாவட்டம்

# துறைமுகம் பகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி. பங்கேற்றனர்!

சென்னை, ஜூன் 17-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி ஆணையத்தின் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன், சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

அதன் விவரம் வருமாறு:

முதலாவதாக 59வது வட்டம், எல்லீஸ்புரம் பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளியில், சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின்கீழ் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டும் பணியை துவக்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து இரண்டாவது நிகழ்வாக, 59வது வட்டம், காந்தி நகர், பல்லவன் சாலை பகுதியில், மாமன்ற உறுப்பினர் நிதி ரூ.9 லட்சம் மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் புனரமைக்கும் பணி மற்றும் ரூ.16 லட்சம் செலவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியை துவக்கி வைத்தனர். அதனை தொடர்ந்து மூன்றாவது நிகழ்வாக 60வது வட்டம், இப்ராஹிம் சாஹிப் தெரு, 2வது சந்தில் உள்ள சென்னை உருது முஸ்லீம் மேல்நிலைப் பள்ளியில், ரூ.96,17,000 மதிப்பீட்டில் புதிய கூடுதல் கட்டிடம் கட்டும் பணியை துவக்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து நான்காவது நிகழ்வாக 54வது வட்டம், பெத்து தெருவில், பெருநகர சென்னை மாநகராட்சி மூலதனம் நிதியின் மூலம் புனரமைக்கப்பட்ட திவான் பகதூர் சிவஞானம் பூங்காவினை மக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் சென்னை வடக்கு வட்டார துணை ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், மண்டலக் குழுத் தலைவர் ப. ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் இசட்.ஆசாத், திருமதி.கே.சரஸ்வதி, ராஜேஷ் ஜெயின், வட்டக் கழகச் செயலாளர்கள் சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், மா.ஜெய்சங்கர், கே.கவியரசு மற்றும் கழக முன்னணியினர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில்

# நெகிழி ஒழிப்பு- குப்பைகளை வகைப்பிரித்தல் விழிப்புணர்வு முகாம்!

## அசோக் நகர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது!

சென்னை, ஜூன் 17-

பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், அசோக் நகர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒருமுறை உபயோகப் படுத்திதூக்கிஎறியக்கூடிய நெகிழி பொருட்களால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள் மற்றும் அதனைத் தடுக்கும் முறைகள் குறித்த விழிப்புணர்வு முகாம் நேற்று (16.06.2023) நடத்தப்பட்டு, அங்கு பயிலும் மாணவியர் மற்றும் ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இம்முகாமில் குப்பைகளை வகைப்பிரித்து அளித்தலின் அவசியம், ஒரு தடவை உபயோகப்படுத்தி தூக்கி எறியக் கூடிய நெகிழிப் பொருட்களால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகள், அதற்கு மாற்றாக பயன்படுத்த வேண்டிய பொருட்கள் குறித்து காட்சி வழி விளக்கம் மற்றும் காணொலி காட்சிகள் மூலமாக மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, நெகிழி பைகளுக்கு மாற்றாக பயன்படுத்தும் வகையில், ஸ்ரீசங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி சார்பாக வழங்கப்பட்ட 1,050 மஞ்சப்பைகள் அனைத்து மாணவியர், தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி.சீனிவாசன், எக்ஸ்னோரா கோவிந்தராஜ், பசுமைப்படை தங்கராஜ், எஸ்.எஸ். ஜெயின் கல்லூரி உதவிப் பேராசிரியர் சாந்தினி மற்றும் தலைமையாசிரியை தமிழரசி ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை துறைமுகம் சட்டமன்றத் தொகுதி சென்னை மாநகராட்சி சிவஞானம் பூங்காவில் சிறுவர்கள் விளையாட்டு திடல் புதிய திறந்தவெளி உடற்பயிற்சி மையம் மற்றும் புதிய செயற்கை நீரூற்று நிலையம் உள்ளிட்டவை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் வடக்கு மண்டல இணை ஆணையர் சிவகுரு பிரபாகரன், பகுதி செயலாளர் முரளி, மண்டல குழு தலைவர் ஸ்ரீராமுலு, வட்டச் செயலாளர் ஜெய்சங்கர் உள்ளனர்.

### எழும்பூர் காவல் மருத்துவமனையில்

# மேலாண்மை மென்பொருள் காவலர் நலன் திட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்!

சென்னை, ஜூன்.17-

சென்னை எழும்பூரிலுள்ள காவல் மருத்துவமனை 01.04.1928 அன்று காவல் அதிகாரிகள், ஆளிநர்கள் மற்றும் ஓய்வு பெற்ற காவலர்கள் உட்பட அவர்களது குடும்பத்தினர் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக ஒரு மருத்துவ அதிகாரியுடன் மருந்தகமாக நிறுவப்பட்டது. பின்னர் இந்த மருந்தகம் 1963ம் ஆண்டு 5 மருத்துவ அதிகாரிகளுடன் 15 படுக்கைகள் கொண்ட நகர காவல் மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டது. தற்போது காவல் மருத்துவமனை மேலும் தரம் உயர்த்தப்பட்டு, புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்தில் 50 படுக்கைகள் மற்றும் 10 மருத்துவர்கள் கொண்டு காவல் ஆளிநர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு உயர்ரக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சென்னை பெருநகரம், தாம்பரம், ஆவடி காவல் ஆணையரகம் மற்றும் சென்னையில் உள்ள அனைத்து அலகுகளிலும் பணிபுரிந்து வரும் காவல் அதிகாரிகள், ஆளிநர்கள், ஓய்வு பெற்ற காவல் ஆளிநர்கள் மற்றும் காவல் குடும்பத்தினருக்கு, சென்னை, எழும்பூரிலுள்ள காவல் மருத்துவமனையில் (Police Hospital) பொது மருத்துவம் (MD), காது, மூக்கு தொண்டை (ENT), கண் (Eye). பல் (Dental), எலும்பு (Ortho) உள்பட பல மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், C.T.Scan, Mammogram, Modern Ultra Sonogram, Modern Digital Xray, Fully Automated Laboratory Analyzers, Bio Chemistry Analyzer, Electrolyte Analyzer, Hematology Analyzer, Coagulation Analyzer, Colposcopy (for Cancer cervix screening). Diagnostic ENT Endoscopy, Operation Theatre with Modern Medical Equipments, Oxygen Generator with Central Oxygen Supply facily ஆகிய நவீன மருத்துவ உபகரணங்களுடன் காவல் குடும்பத்தினருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டும், பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகிறது.

**கணினி மயமாக்கும் பணிகள்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த 2022-2023ம் நிதியாண்டில், எழும்பூர் காவல் மருத்துவமனையை நவீனபடுத்தும் நோக்கில், காவல் மருத்துவமனை மேலாண்மை மென்பொருள் எனும் கணினிமயமாக்கப்பட்ட திட்டத்தை செயல்படுத்திட அறிவித்து, ரூ.45,50,000/- நிதி ஒதுக்கீடு செய்தார். அதன்பேரில், “காவல் மருத்துவமனை மேலாண்மை மென்பொருள்” மூலம் கணினிமயமாக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று நிறைவடைந்தது.

அதன்பேரில், தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (16.06.2023) மாலை, எழும்பூர் காவல் மருத்துவமனையில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சங்கர் ஜிவால் முன்னிலையில், காவல் மருத்துவமனை மேலாண்மை மென்பொருள், காவலர் நலன் கணினி மயமாக்கப்பட்ட திட்டத்தை துவக்கி வைத்தார்.

எழும்பூர் காவல் மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வரும் காவல் ஆளிநர்கள், ஓய்வு பெற்ற காவல் ஆளிநர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு, விவரங்கள் காகிதத்தில் எழுதிக் கொடுத்து மருத்துவரை சந்தித்து சிகிச்சை பெறும் வழக்கம் மாற்றப்பட்டு, அனைத்து காவல் ஆளிநர்கள், ஓய்வு பெற்ற காவல் ஆளிநர்கள், அவர்களது குடும்பத்தினரின், பெயர், வயது, இரத்தவகை உள்ளிட்ட விவரங்கள் கணினியில் பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்கென ஒரு ID No. கொடுக்கப்பட்டுள்ளது.

இனி சிகிச்சைக்கு வரும் காவல் ஆளிநர்கள் மற்றும் குடும்பத்தினர், இந்த ஐ.டி.யை கூறி அவர்களது மருத்துவ சிகிச்சை சீட்டு பெற்று, மருத்துவரை சந்தித்து சிகிச்சை பெறலாம், சிகிச்சை அளிக்கும் மருத்துவர், நோயின் விவரம், சிகிச்சை விவரம், மருந்து, மாத்திரைகள் விவரம் என அனைத்தையும் அவரது கணினியில் நோயாளிகளின் பக்கத்தில் பதிவு செய்வார்கள். இதனால், சிகிச்சை பெறும் நோயாளிகள் அடுத்து முறை மருத்துவரை சந்திக்கும் போது, அவருக்கு அளிக்கப்பட்ட பழைய சிகிச்சை வரலாறுகளை (Case History) கண்காணித்து, அதற்கேற்ப மருத்துவம் அளிக்கப்பட்டு, மருந்து மாத்திரைகள் அளிக்கப்படும். இதனால், தகுந்த சிகிச்சை அளிக்க பெரிதும் உதவுவதால், நோயாளிகளுக்கும், மருத்துவர்களுக்கும் இடையிலான தொடர்பு மேம்படுத்தப்படும்.

**காவலர் நலன் செயலி!**

உடல் நலனை மென்பொருள் மூலம் கண்காணிக்கும் கணினி மயமாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் காவல் ஆளிநர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் தங்களது சிகிச்சை விவரங்களை ” காவலர் நலன் “ செயலி மூலம் அறிந்துக் கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், காவல் ஆளிநர்கள் கோரிக்கைக்கு ஏற்ப அவர்களுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பதிவுகளின் நகல்களையும் பெறலாம்.

இத்திட்டத்தின் சிறப்பம்சமாக, மருத்துவமனைக்கு நேரடியாக வர இயலாத நோயாளிகள், குறிப்பிட்ட நேரத்தில் முன்பதிவு செய்து, Video Calling மற்றும் தொலைபேசி மூலம் மருத்துவரிடமிருந்து மருத்துவ உதவி மற்றும் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளலாம்.

இந்நிகழ்ச்சியில், சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையாளர் ஜெ.லோகநாதன், (தலைமையிடம்), இணை ஆணையாளர் திருமதி. பி.சாமூண்டீஸ்வரி, (தலைமையிடம்), துணை ஆணையாளர்கள் எஸ்.இராதாகிருஷ்ணன் (தலைமையிடம்), வி.ஆர்.சீனிவாசன் (நிர்வாகம்), கே.சௌந்தராஜன் (ஆயுதப்படை), எழும்பூர் காவல் மருத்துவமனை தலைமை மருத்துவர் (CMO) கே.மது பிரசாத், மருத்துவர்கள், செவிலியர்கள், காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்கள் கலந்து கொண்டனர்.




மாணவர்களின் நலன் பாதிக்கும் வகையில் செயல்படும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து நேற்று, காலை ஆளுநர் மாளிகை அருகே சின்னமலை சந்திப்பில் கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தி.மு.க. தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் கழக மாணவர் அணி நிர்வாகிகள் உட்பட மாணவர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு ஆளுநருக்கு எதிராக கண்டன முழக்கமிட்டனர்.